بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/04/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**அருளுக்குரிய ரமலானில் - குறிப்பாக கடைசி பத்து நாட்களைக் கருத்தில் கொண்டவாறு தரூது ஷரீஃப், தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்தும், அவற்றை அதிகமாக ஓதுவது குறித்தும் கவனமூட்டப்பட்டது**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

அல்லாஹ்வின் அருளால் நாம் தற்போது ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். இறுதிப் பத்து நாட்களுக்குள் செல்லவிருக்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதைக் குறித்து கூறினார்கள்: 'அல்லாஹ் தஆலா ரமலானின் இறுதிப் பத்து நாட்களில் நரகத்திலிருந்து ஈடேற்றம் வழங்குகிறான்.'

எனவே இந்த நாள்களில் குறிப்பாக நாம் நமது இபாதத்துகளை சரிசெய்ய வேண்டும்; தரூது, தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபாரில் ஈடுபட வேண்டும். அத்துடன் அடியார்களின் உரிமைகளை வழங்குவதின் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ரமலானுடைய இறுதி பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த அளவு முயற்சி செய்தார்கள் என்றால், அந்நாட்களைத் தவிர மற்ற நாட்களில் அதைக் காண இயலாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஒரு அழகிய முன்மாதிரி ஆவார்கள். ஆகவே நாம் நமது சக்திக்கு ஏற்ப அந்த உயர் தரங்களை அடைய முயற்சிக்க வேண்டும். நாம் இந்த நாட்களில் குறிப்பாக துஆக்களில் ஈடுபட வேண்டும். குறிப்பாக அஹ்மதிகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பாகிஸ்தானிலும் மற்ற முஸ்லிம் நாடுகளிலும் ஜமாஅத்துக்கு எதிராக பல்வேறு முயற்சிகள் செய்யப்படுகின்றன. அதிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. அதேபோன்று தற்போது பரவி வரும் தொற்று நோயிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. ஆமீன்!

நமது நற்பேறு என்னவென்றால், அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூலமாகவும், இக்காலத்தில் அன்னாருடைய உண்மை ஊழியர் மூலமாகவும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளான். அல்லாஹ்வை புகழ்வதுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது தரூது அனுப்புவது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு மிகவும் அவசியமாகும். அதுவன்றி அந்த துஆக்கள் வானம் பூமிக்கு நடுவில் தொங்க ஆரம்பித்து விடுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'என்மீது தரூது அனுப்புங்கள். நீங்கள் தரூது அனுப்புவது உங்களது தூய்மை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றிக்கான வழியாகும். எவர் என்மீது தூய உள்ளத்துடன் தரூது அனுப்புவாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை தரூது அனுப்புவான். மேலும் அவருக்கு பத்து படித்தரங்களில் உயர்வை வழங்குகிறான்.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தகுதி, அந்தஸ்துகளை புரிந்து கொண்டதாக நாம் வாதம் செய்கின்றோம். ஆகவே தரூதுடைய முக்கியத்துவத்தை புரிந்து கொள்வது நமது கடமையாகும். அல்லாஹ் நமது துஆவை கேட்க வேண்டும் என்பதற்காக மட்டும் தரூது ஓதக்கூடியவர்களாக நாம் இருக்கக்கூடாது. மாறாக நிரந்தரமான தூய்மை நமது வாழ்வின் அங்கமாக ஆவதற்காக நாம் தரூது ஓதவேண்டும்.

صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّآلِ مُحَمَّدٍ سَیِّدِ وُلْدِ آدَمَ وَ خَاتَمِ النَّبِیِّیْنَ என்ற **தமது இல்ஹாமைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இதில் கூறப்பட்டதாவது, எல்லா உயர்வுகள், மேன்மைகள், அருள்கள் அனைத்தும் அவர்களினால் கிடைத்த அன்பளிப்பு ஆகும். அவர்களின் மீது அன்பு கொண்டதன் வெகுமதி ஆகும். சுப்ஹானல்லாஹ்! பிரபஞ்சங்களின் தலைவராகிய அன்னாரது உயர் தகுதி எத்தகையது! அவரது நேசம் பெற்றவர் இறைவனின் நேசத்தை பெற்று விடுகிறார்; அவரது சேவகராக இருப்பவர் ஓர் உலகின் சேவையை பெறத்தக்கவர் ஆகி விடுகிறார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சேவகத்தில் வந்ததன் காரணமாக அன்னாரை உம்மத்தி நபியாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பணியை பரப்புவதற்காக அன்னாரை அல்லாஹ் அனுப்பியுள்ளான். ஆகவே இன்று உலகில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைத்துள்ள அந்தஸ்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஊழியத்தில் கிடைத்த அந்தஸ்தாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** 'ஒரு இரவில் இந்த எளியவன் எந்த அளவுக்கு அதிகமாக தரூது ஷரீஃப் ஓதினேன் என்றால், அதனால் உள்ளமும் உயிரும் நறுமணம் பெற்றது. அந்த இரவில் கனவில் கண்டேன். ஒளிப் பிரவாகம் நிறைந்த குடங்களுடன் வானவர்கள் இந்த எளியவனுடைய இருப்பிடத்திற்கு வருகின்றனர். இவை ஹஸ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது நீர் அனுப்பிய அந்த தரூதின் அருள்களாகும் என்று அவர்களில் ஒருவர் கூறுகிறார்.'

நாம் எத்தகைய மஸீஹ், மஹ்தியை ஏற்றுக்கொண்டவர்கள் என்றால், அவரைக் குறித்து வானத்தின் மலக்குகள் கூட هٰذَا رَجُلٌ یُّحِبُّ رَسُوْلَ اللّٰهِ என்று கூறினார்கள். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு கொண்டவர் இந்த மனிதர்தான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'இந்தக் கூற்றின் பொருள் என்னவெனில், மார்க்கத்தை உயிர்ப்பிக்க மிகப்பெரும் நிபந்தனை தூதரின் மீது அன்பு கொள்வதாகும்.'

இந்த உயிர்பிப்பவரின் இயக்கத்தை முன்னெடுத்து செல்வோம் என்று நாம் உறுதிமொழி எடுத்திருக்கின்றோம். ஆகவே நமது கடமை என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது தரூதும், ஸலாமும் அனுப்பியவாறு அந்த மஸீஹ் மற்றும் மஹ்தியுடைய உதவியாளர்களாக ஆகவேண்டும். எனவே மிகப்பெரிய பொறுப்பு அஹ்மதிகளாகிய நமது தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது. நாம் கியாமத்து வரை இந்த வெகுமதிகளுக்கு, அருள்களுக்கு வாரிசாக வேண்டுமெனில், நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது தரூதும், ஸலாமும் அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும். நாம் இவ்வாறு செய்து வருவோம் எனில் பிறகு எதிரிகளின் சதித்திட்டங்கள், தாக்குதல்கள் அல்லாஹ்வின் அருளால் எவ்வாறு அழிந்து போகின்றன என்பதை நாம் பார்ப்போம்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** 'ஸலாத் என்பதன் பொருள் துஆவாகும். அல்லாஹும்ம ஸல்லி என்பதன் பொருள் அல்லாஹ்வே! நீ

ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக துஆ செய் என்பதாகும். அவன் துஆ செய்கிறான் என்று நாம் அல்லாஹ்வை பற்றி கூறும்போது அதன் பொருள், இறைவன் தான் படைத்த படைப்புகள் அனைத்தையும் பார்த்து, என் அடியாருக்கு உதவி செய்யுங்கள் என்று கூறுவதாகும். ஆகவே அல்லாஹும்ம ஸல்லி என்பதன் பொருள், அல்லாஹ்வே! நீ அனைத்து நன்மை, நற்செயலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக விரும்புவாயாக! என்பதாகும்.

அல்லாஹும்ம பாரிக் என்பதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ்வே! நீ நபீ கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக உனது கருணைகள், அருள்கள் மற்றும் வெகுமதிகள் ஆகியவற்றை எந்த அளவு அதிகரிக்க வேண்டுமென்றால் முழு உலகிலுள்ள கருணையும் அருளும் அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒன்றுகூடி விட வேண்டும்.'

ஆகவே நாம் உள்ளத்தில் வேதனை கொண்டவாறு அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மார்க்கத்தின் உயர்வுக்காக துஆ செய்வோம் எனில், அல்லாஹ் நம்மையும் அந்த துஆவில் பங்குதாரர் ஆக்கி, நம்மையும் அந்த தரூதிலிருந்து அருள் பெறுபவர் ஆக்குவான். ஆனால் நிபந்தனை என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டுவந்த போதனையின்படி அமல் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் உரிமை, அடியார்களின் உரிமை ஆகியவற்றின் பக்கம் கவனம் தோன்ற வேண்டும். (அன்னாருடைய) உண்மையான சந்ததிகள் என்பதன் உரிமையை வழங்கக் கூடியவர்களாக நாம் திகழ வேண்டும். அதுவன்றி, அல்லாஹ் மற்றும் தூதரின் பெயரால் அநீதி இழைக்கக்கூடாது. சட்டத்தை முறித்துவிட்டு, மக்களை துன்பத்தில் ஆழ்த்திவிட்டு, பாதைகளை மறித்துவிட்டு - நோயாளிகள் ஆஸ்பத்திரிக்கு கூட போக விடாமல் தடுத்து விட்டு பிறகு தரூது ஓதிவிட்டு, நாங்கள் ரஸூலுடைய நேசர்கள் ஆவோம்; எங்களை ஒன்றும் கூறக்கூடாது என்று சொல்வது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் கட்டளைகளுக்கு முற்றிலும் கட்டுப்படாமல் இருப்பதாகும்.

தரூது ஷரீஃபின் முக்கியத்துவம் குறித்து இதன் மூலம் இன்னும் அதிகமாக நாம் புரிந்து கொள்ள முடியும். அதாவது, திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்டவர்களை பார்த்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது தரூது அனுப்புங்கள் என்று கூறியுள்ளான். தரூது அனுப்புவதற்கு எந்த அளவு முக்கியத்துவம் உள்ளது என்றால், அல்லாஹ் மற்றும் அவனது மலக்குகளும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது தரூது அனுப்புகிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த (அல்அஹ்ஸாப் 57 ஆம்) வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:** இந்த வசனத்திலிருந்து தெரியவருவதாவது, ஹஸ்ரத் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய செயல்கள் எத்தகையவை எனில் அல்லாஹ் அவர்களின் பண்புகளைப்பற்றி, குணநலன்களைப்பற்றி புகழ எந்தவொரு தனி வார்த்தையையும் பயன்படுத்தவில்லை. அதாவது, அன்னாரின் நற்செயல்களை புகழ்வது அளவிற்கு அப்பாற்பட்டவையாக இருந்தது. இதுபோன்ற வசனம் வேறு எந்த நபியுடைய கண்ணியத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை. அன்னாரது ஆன்மாவில் எவ்வாறான உண்மை மற்றும் தூய்மை இருந்தது எனில், அன்னாரின் செயல்கள் இறைவனிடம் எவ்வளவு விரும்பத்தக்கதாக இருந்தது எனில், அல்லாஹ் நிரந்தரமான ஒரு கட்டளையை வழங்கி விட்டான். அதாவது, வருங்கால மக்கள் நன்றி செலுத்தும் வகையில் தரூது அனுப்புவார்கள் என்று கூறிவிட்டான்.

இந்த ரமலானிலும், பிறகும் கூட தரூதினுடைய முக்கியத்துவத்தை புரிந்து தரூது அனுப்பக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கிக்கொண்டே செல்வானாக!

இப்போது நான் கவனமூட்ட விரும்பும் இன்னொரு முக்கிய விஷயம் இஸ்திஃக்ஃபார் ஆகும். اَسۡتَغۡفِرُاللّٰهَ رَبِّیۡ مِنۡ کُلِّ ذَنۡبٍ وَّاَتُوۡبُ اِلَیۡهِ இது மிக மிக முக்கியமான துஆ ஆகும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இஸ்திஃக்ஃபாருடைய அசல் பொருள் என்னவென்றால், மனித பலவீனம் வெளிப்பட்டு விடக்கூடாது; என் இயல்புக்கு நீ ஓர் ஆதரவு வழங்குவாயாக என இறைவனிடம் ஒரு விண்ணப்பம் செய்தல். இது ஃகஃபர என்ற சொல்லில் இருந்து வெளிப்பட்டுள்ளது. அதற்கு மூடுதல் என்று பொருள். ஆகவே இதன் பொருள் என்னவென்றால், இறைவன் தனது ஆற்றலுடன் மனித இயல்பின் பலவீனத்தை மூடிவிட வேண்டும் என்பதாகும். ஆனால் பிறகு பொதுவான மக்களுக்காக இந்த சொல்லின் பொருள் இன்னும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இறைவா! பாவம் வெளிப்பட்டு விட்டது. அதை மூடி மறைப்பாயாக! என்று பொருள் கொள்ளப்படுகிறது. இறைவன் மனிதனைப் படைத்து விட்டு அவன் தனியே பிரிந்து செல்லவில்லை. அவன் மனிதனுடைய காலிக் - படைப்பாளன் ஆக இருப்பது போன்று கய்யூம் ஆகவும் இருக்கின்றான். அதாவது, தனது ஒத்தாசையால் பாதுகாப்பவனாகவும், நிலைபெறச் செய்பவனாகவும் இருக்கிறான்.

இதன் பக்கமே திருக்குர்ஆனில் اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الۡحَیُّ الۡقَیُّوۡمُ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனிதன் பிறந்துவிட்டான்; பிறகு படைக்கும் தன்மை முழுமையாகி விட்டது. ஆனால் கய்யூம் என்ற பண்பு நிரந்தரமானது. எனவே நிரந்தரமான இஸ்திஃக்ஃபார் உடைய தேவை ஏற்பட்டது. இதன் பக்கம் சுட்டிக்காட்டியவாறு اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ என்று வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, உன்னுடைய கய்யூம் மற்றும் ருபூபிய்யத் ஆகியவை எங்களுக்கு உதவி செய்யட்டுமாக! மேலும் எங்களை தடுமாற்றத்திலிருந்து காப்பாற்றட்டுமாக!

அல்லாஹ் எந்த அளவுக்கு மன்னிப்பான் என்று தற்காலத்தில் நிறைய சிறுவர்கள், இளைஞர்கள் கேள்வி கேட்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: எனது அருள் மிகவும் பரந்தது; அதற்கு அளவு கிடையாது. ஆனால் நிபந்தனை என்னவெனில், மனிதன் உண்மையான முறையில் தவ்பா செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘தனது அடியார் தவ்பா செய்வதால் அல்லாஹ் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறான் என்றால், காட்டில் தனது தொலைந்த ஒட்டகம் திரும்பக் கிடைக்கும் போது ஒரு மனிதர் கூட அவ்வளவு மகிழ்ச்சி அடைய மாட்டார்.’

அல்லாஹ் கூறுகிறான்: ஒருவர் ஒரு கையளவு என்னை நெருங்கினால் நான் இருமடங்கு அவரை நெருங்கிச் செல்கிறேன். எனவே நமது பணி என்னவென்றால், நாம் நம்மை பாவத்தில் இருந்து விலக்கி வைத்தவாறு, பாவ மன்னிப்பு பெறுவதற்காக அல்லாஹ்வின் பக்கம் செல்ல வேண்டும். இந்த மாதத்தை குறிப்பாக இறைவன் இதற்காக தந்துள்ளான். ரமலான் மாதம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான மாதமாகும். அதனுடைய இறுதிப் பத்து நாட்கள் நரகத்திலிருந்து காப்பாற்றக்கூடிய நாட்களாகும். அல்லாஹ்வுடன் நாம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் நமது தரூது, நமது இஸ்திஃக்ஃபார் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருவதாக ஆகிவிட்டால், எதிரிகள் ஆயிரம் முயற்சிகள் செய்தாலும் சரி! நமக்கு எந்த நஷ்டமும் ஏற்படுத்த இயலாது.

ரமலானின் துஆக்களில் எதிரிகளின் தீங்கிலிருந்து தப்புவதற்கு அதிகம் துஆ செய்யுங்கள். அவ்வாறே கொரோனா தொற்று நோயிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கும் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த துன்பத்திலிருந்தும் உலகத்திற்கு ஈடேற்றத்தை வழங்குவானாக. நம்மையும் பாதுகாப்பானாக. உண்மையான முறையில் தரூது, இஸ்திஃக்ஃபார் செய்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. ஆமீன்!

(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)